1979 மார்ச் 21]

திரு. மு. கருணாநிதி : பேரவைத் துணைத் லைவர் அவர்களே நேற்றைய தினம் நடைபெற்ற அலுவல் ஆய்வுக் குழுவில் வகுக்கப்பட்டுள்ளபடி நிகழ்ச்சிகள் நடத்துவது சம்பந்தமாக ஆராயப்பட்டு சில முடிவுகள் எடுக்கப்பட்டிருக் கின்றன. அவைகள் எல்லாம் அந்தந்த கட்சியிலுள்ள உறுப் பினர்களுக்கு தெரிவிக்க இயலாமல் போயிருக்கலாம். நேற்று முடிவு எடுத்து, அவைகள் தெரிவிக்க இயலாமல் போனதற்கு காரணம் இன்று காலையில் மறுபடியும் தொடர்ந்து சட்ட மன்றம் இருப்பதாலும், போதிய நேரமின்மையாலும் அந் தந்த கட்சி உறுப்பினர்களுக்கு தெரிவிக்கப்படாமல் போயிருக் கக்கூடும். 41-போன்ற விதிகளில் பிரச்சினை வருகின்ற நேரத் தில் அதைக் கொடுத்தவர்கள் கேள்விகள் கேட்கலாம். அதிலும் ஒரே பிரச்னையைப்பற்றி 10 பேர்கள் கொடுத்திருந்தாலும், அந்த பத்து பேர்களையும் கேள்விகள் கேட்க அனுமதிக்க வேண்டியதில்லை. பத்து பேர்களும் நேரத்தை எடுத்துக் கொள்ளவேண்டியதில்லை. அந்தந்த கட்சியிலுள்ள ஒருவர் மட்டும் கேள்வி கேட்டால் போதும் என்றும் முடிவு எடுக்கப் பட்டது. இன்று அந்த முடிவு நடைமுறைப்படுத்தப்பட்டு இருக்குமானால் நன்றாக இருந்திருக்கும். ஆனால் பாயிண்ட் ஆப் ஆர்டர் என்ற முறையிலே நண்பர் கந்தசாமி அவர்களை பேச தாங்கள்........ கந்தசாமி அவர்கள் இதற்காக கோபப் படக்கூடாது—அவர்களை தாங்கள் பேச அனுமதித்துவிட் டீர்கள். அதைத் தொடர்ந்துதான் மற்றவர்களும் பேச எழுந் தார்கள். அது தான் நிலை. எங்கள் கட்சியைப் பொறுத்தளவில் அவர்கள் இனிமேல் இந்தப் பிரச்சினைக்காக எழமாட்டார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் எப்படி உங்கள் கட்சி உறுப்பினர்களுக்குச் சொல்ல முடியவில்லையோ, நானும் அலுவல் ஆய்வுக்குழு கூட்டத்திற்கு வர முடியவில்லை. இங்கு நான் சபையை நடத்திக்கொண்டிருந்தேன். ஆகவே தான் இந்த முடிவுகள் எனக்கும் தெரியாமல் போயிற்று. எனக் குத் தெரிந்திருந்தால் திரு. கந்தசாமி அவர்களையும்கூட இதில் பேச அனுமதித்து இருக்க மாட்டேன். அடுத்து, அரசினர் சட்ட முன்வடிவு.

6. அரசினர் சட்ட முன்வடிவு.

முன் நிதி ஒதுக்க (செலவினக் கணக்கின் மீது வாக்கெடுப்பு) சட்ட முன் வடிவு, 1979.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ''தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு முன் நிதி ஒதுக்க (செலவினக் கணக்கின் மீது வாக்கெடுப்பு) சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு 16/1979) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்'' என்று கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவுகள் 2, 3, அட்டவணை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப் பெற்றன.

பிரிவு 1, நெடுந்தலைப்பு பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ''தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு முன் நிதி ஒதுக்க (செலவினக் கணக்கின் மீது வாக்கெடுப்பு) சட்ட முன் வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 16/1979) நிறைவேற்றப்பெற வேண்டும்'' என்று கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன் வடிவு சட்டமாக நிறைவேற்றப் பெற்றது.

[முற்பகல் 10-50].

7. வரவு-செலவுத் திட்டம் 1979–80. பொது விவாதம் —தொடர்ச்சி.

திரு. என். சங்கரய்யா: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டினுடைய வரவு-செலவுத் திட்டத்தைப் பற்றி மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக எங்கள் கருத்துக் களை நான் தெரிவிக்க விரும்புகிறேன். மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் தன் உரையிலே 70-வது பாராவிலே அவர் ஒரு கருத்தை கூறியிருக்கிறார். கீழ் தட்டிலே உள்ள மக்கள் நீண்ட காலத்திற்கு தங்களுடைய நிலைமை மோசமாகி வருவதைப் பொறுத்துக் கொண்டிருக்க மாட்டார்கள். ஆகவே, தீவிர மாற்றங்களை ஏற்படுத்தி, அவர்களுடைய வாழ்க்கையிலே முன்னேற்றத்தைக் கொண்டுவராமல் போனால், இன்றைக்கு இருக்கக்கூடிய நிலைமைகள் நீடிக்காது என்று அவர் குறிப்பிட்டு இருக்கிறார். இதை நான் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். அப்படியென்றால், இந்த அரசாங்கத்தைப் பார்த்து ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். அதாவது நகரப்புறத்திலே உள்ள மக்களைக் காட்டிலும் கிராமப்புறங்களிலே உள்ள கோடிக்கணக்கான மக்கள் பற்றி நீங்கள் அதிக அக்கறை காட்டுகிறீர்கள். ஆகவே, இந்தப் பெரும்பாலான மக்களுக்காக, ஏராளமாக நன்மைகளைச் செய்து கொடுத்திருக்கிறோம் என்று கூறுகிறீர்கள். முதலிலே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே குறிப்பிட